செ.வெ.எண்: 08 / ஏப்ரல் நாள்: 06.04.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## 2016 சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின்போது தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (06.04.2016), மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்:

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, திருவாடனை, இராமநாதபுரம் , முதுகுளத்தூர் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. மாவட்டத்தில் 5,51,194 ஆண் வாக்காளர்களும், 5,45,915 பெண் வாக்காளர்களும், 74 மூன்றாம் பாலின வாக்காளர்களும் ஆக மொத்தம் 10,97,183 வாக்காளர்கள் உள்ளனர். தேர்தல் வாக்குப்பதிவிற்காக 747 இடங்களில் மொத்தம் 1,307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 37 இடங்களில் உள்ள 73 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களாக கண்டறியப்பட்டு, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் வாக்குப்பதிவிற்காக இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி மொத்தம் 1,568 கட்டுப்பாட்டு இயந்திரங்களும், வாக்குச் செலுத்தும் இயந்திரங்களும் தேவைப்படுகின்றன. வாக்குப்பதிவிற்குத் தேவையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் 2,501 கட்டுப்பாட்டு கருவிகளும் (Control Unit) 2,314 வாக்கு செலுத்தும் இயந்திரங்களும் (Ballot Unit) தயார் நிலையில் பாதுகாப்பான முறையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

மேலும் தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்கள் மற்றும் முறைகேடுகளை கண்காணித்திடும் வகையில் மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் தேர்தல் பறக்கும் படை குழுவினர்கள் மற்றும் நிலைத்த கண்காணிப்பு குழுவினர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இக்கண்காணிப்பு குழுவினர்களுக்கு பொதுமக்கள் புகார் தெரிவித்திட தனி கைபேசி எண்கள் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை கண்காணிப்பதற்காக செலவு பார்வையாளர்கள், உதவி செலவு பார்வையாளர்கள் மற்றும் வீடியோ கண்காணிப்புக்குழு, கணக்குக்குழு ஆகிய குழுக்களும் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவித்திட ஏதுவாக 24 மணி நேரமும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகின்றது. பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை 1800 425 7038 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், 04567 - 232243 என்ற மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். இதுதவிர, 1800 425 6669 என்ற சென்னை வருமான வரித்துறை கட்டுப்பாட்டு அறை கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும் புகார் தெரிவிக்கலாம்.

தேர்தல் நடத்தை விதிமுறை மீறல் தொடர்பாக தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு இதுவரை 32 புகார்கள் வரப்பெற்று, 30 புகார்களின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 புகார்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்தல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ள 218 நபர்கள் மீது குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CRPC Act)107-ஆவது பிரிவின் கீழும், 24 நபர்களின் மீது 109-ஆவது பிரிவின் கீழும், 30 நபர்களின் மீது 110-ஆவது பிரிவின் கீழும் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதவிர, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உரிமம் பெற்ற

துப்பாக்கி உரிமையாளர்கள் 102 நபர்களிடமிருந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காவல்துறை வசம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு அலுவலர்கள் வாக்களித்திட ஏதுவாக தபால் வாக்குப்பதிவு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 11,337 அரசு அலுவலர்கள் தபால் வாக்குப்பதிவு செய்திட அந்தந்த அலுவலர்களிடமிருந்து வாக்காளர் அடையாள அட்டை எண் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இதுதவிர, தேர்தல் பணிகளுக்குத் தேவையான 162 வாகனங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் மூலமாகவும் , மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக 258 சக்கர நாற்காலிகள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலமாகவும் ஏற்பாடு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதவிர தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சியும் நடைபெற்று வருகின்றன. எனவே நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ஐ முன்னிட்டு அனைத்து தேர்தல் முன்னேற்பாடு பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்தும் வாக்களிப்பதன் முறை குறித்தும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.சாந்தா, தேர்தல் வட்டாட்சியர் திரு.தர்மன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**